1990 மார்ச் 23]

வாய்க்கால்களில் தூரெடுக்கும் பணி

* 2365 திரு. அ. செங்குட்டுவன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் செல்லும் வாய்க்கால்களில் அந்தந்த ஒன்றியக் குழுக்களைக் கொண்டு தூரெடுக்கும் பணியினை தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

(அ) ஊராட்சியிலுள்ள கால்வாய்களைத் தூரெடுக்கும் பணியினை ஊராட்சி ஒன்றிய குழுக்களிடம் ஒப்படைப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாம்பழ பழச்சாறு பதிப்படுத்தும் தொழிற்சாலை

*1918 திரு. கே. ஆர். இராஜேந்திரன் :
திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தர்மபுரி மாவட்டம் பர்கூரில் மாம்பழ பழச்சாறு பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை அரசு அமைக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே :

பர்கூரில் மாம்பழச்சாறு பதப்படுத்தும் தொழிற்சாலை அரசுத்துறையில் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

திரு. கே. ஆர். இராஜேந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தர்மபுரி என்று பிரிக்கப்படாத மாவட்டமாக இருந்தபோது எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் அதிகமாக மா விளைச்சல் காணப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர் தொகுதியில் அதிகமாக மா விளைகிறது. அந்த மாங்காயைக் கருத்தில்கொண்டு மா பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அரசுத் தரப்பில் அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுத் தரப்பில் அப்படிப்பட்ட பதப் படுத்தும் தொழிற்சாலை அமைக்கின்ற முடிவு இல்லை என் பதைத்தான் முன்பு கூறி இருக்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தலைவர் அவர் களே, மாம்பழத்தைப் பொறுத்தவரையில் அது விரைவிலே கெட்டுவிடுகின்ற பழம். அப்படிப்பட்ட அந்தப் பழத்தை உற்பத்தி செய்கின்ற விவசாயப் பெருமக்கள் அதைப் பாது காக்கின்ற அளவுக்கு வேண்டிய வசதிகள் இல்லாத காரணத் தால் மிகவும் நஷ்டம் அடைகின்றார்கள். அப்படிப்பட்ட அந்த விவசாயப் பெருமக்களினுடைய குறையை நீக்குகின்ற அளவுக்கு ஒரு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைத்துத் தரவும், மேலும் இந்த மாம்பழங்களை எல்லாம் வெளிநாட் டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய வசதிகளையும் அரசு செய்து தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஹோசூர், மற்றும் கிருஷ்ணகிரியில் மாம்பழச்சாறு பதப்படுத்தும் தொழிற்சாலை இருக்கின்றது. தர்மபுரி மாவட்டத்தில் மாம்பழம் ஏறத்தாழ 10,703 ஹெக்டேர் நிலத்தில்தான் பயிரிடப்பட்டு இருக் கிறது. இந்தப் பழத்திற்கு 3 மாத காலத்திற்குத்தான் சீசன் இருக்கிறது. இப்போது ஹோசூரிலும், கிருஷ்ணகிரியிலும் இருக்கக்கூடிய மாம்பழச்சாறு பதப்படுத்தும் தொழிற்சாலை களுக்கு மாம்பழம் போதுமான அளவில் வருகிறது. மேலும் தனியார் இதுபோன்ற தொழிற்சாலை தொடங்க முன்வரு வார்களேயானால், அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலிக்கும்.

முல்லைவாடி விதைப்பண்ணையில் ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துதல்

* 3537 திரு. ஏ. எம். இராமசாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் வட்டம், முல்லைவாடி விதைப் பண்ணையில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

அரசு தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான ஆத்தூர் முல்லைவாடி விதைப்பண்ணையில் ஆக்கிரமிப்பாளர்கள் எவரும் இல்லை. அப்படி இருக்குமேயானால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.